**தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்ததாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ரூபா. 1,919,028 நிதி மோசடியில் உள்ளடங்கியிருந்த, திரைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா. 75,669 பெறுமதியான சேகரிக்கப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | மீதிகளின் உண்மையான பெறுமதிகள் வெளிக்காட்டப்படுகின்ற விதத்தில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |

**(ஆ) மீண்டெழும் செலவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதித் தாபனக் கோவையின் நி.பி 8(4)(i) பிரகாரம் மூலதனச் செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினம் என செலவுத் | சுட்டிக்காட்டப்பட்டுள்ள செலவுத் தலைப்பு களினூடாக எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிப்பதற்கு | தலைப்புகள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள அமைப்பில் |

| | | | |
|---|---|---|---|
| | தலைப்புகள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப் பட்டுள்ளதுடன், அவைகளில் மாற்றம் செய்யப்படக் கூடாது. மாவட்ட செயலகம் அது தொடர்பாக கவனம் செலுத்தாது 7 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா. 235,485 ஆகவிருந்த செலவுத் தலைப்புகள் மாறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுப்பதாக | கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தின் கதிரைகளை திருத்தம் செய்வதற்காக 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா. 1,072,000 இல் ரூபா. 335,000 வேறு செலவுகள் (வினியோகம்) தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா. 737,000 வேறு செலவுகள் (சேவைகள்) தலைப்பின் கீழ் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்கால மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பொழுது சுட்டிக்காட்டப்பட்டுள்ள செலவுத் தலைப்புகளினூடாக மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

**(இ) மூலதனச் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்ட செயலக வளாகத்தில் குளிரூட்டி இயந்திரங்களின் மூலதனத் தன்மையிலான திருத்த வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா. 4,143,000 செலவுகள் மூலதனச் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாது வருமானச் செலவினங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள செலவுத் தலைப்புகளினூடாக எதிர்காலத்தில் மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தலைப்புகள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள அமைப்பில் கணக்கிலிடப்படல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமில்லாத 03 கட்டடங்களின் பெறுமதியாகிய ரூபா. 24,223,031 தொகை 2023 திசம்பர் 31ஆம் திகதியன்று நிதியல்லாச் சொத்துக்கள் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சிகாஸ் தொகுதியிலிருந்தும் மற்றும் நிதியல்லாச் சொத்துக்களிலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | சொத்துக்களின் உண்மையான பெறுமதிகள் வெளிக்காட்டப்படு கின்ற விதத்தில் கணக்கிடப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி செயலாளரின் 2017 யூன் 28ஆம் திகதிய 01/2017 இலக்கமிடப்பட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரசின் அனைத்து நிதியல்லாச் சொத்துக்களும் பட்டியலிடப்பட வேண்டியிருந்த போதும், ஓகவெல பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா. 3,492,009 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நில செவன கட்டடங்களின் பெறுமதி, சூரியவெவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஒரு மிதிவண்டி மற்றும் அம்பலாந்தோட்டை, சூரியவெவ மற்றும் பெலிஅத்த பிரதேச செயலகங்களின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற சேவாபியச கட்டடங்கள் மற்றும் 50 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டுப் பெறுமதிகள் பெறப்பட்டதன் பின்னர் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் மிதிவண்டியின் பெறுமதி சிகாஸ் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள தாகவும் | - மேற்படி - |

**(உ) கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 02 பிரதேச செயலகங்களின் நிதியல்லாச் சொத்துக்களாக சிகாஸ் தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா. 157,958,957 ஆகவிருந்த காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கான குறித்த கிரயம் / மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு தொடர்பான தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக | சொத்துக்களின் பெறுமதிகளை கணக்கிடுவதற்கு அடிப்படையாகவி ருந்த மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| (ii) | விவசாய அமைச்சின் ரூபா. 17,910,000 ஒதுக்கீட்டின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்ட கிராமப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வீடுகளை அண்டி ஆடுகள் வளர்க்கும் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப் பட்டியல், விலங்குகளை வினியோகிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா. 2,267,791 உடன் தொடர்பான ஒப்பந்தப் பத்திரம், பயனாளிகளின் கையொப்பப் படிவங்கள் ஆகியன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அவதானிப்புகளுக்கான பதில்களை விவசாய அமைச்சின் செயலாளரினூடாக கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதாக | குறித்த கணக்காய்வு அத்தாட்சிகளை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரியவெவ பிரதேச செயலகத்தின் மூலம் 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 05 திட்டங்களுக்காக அவ் வருடத்தின் பொறுப்புக்களாக இனங்காணப்படாது, மீளாய்வாண்டில் நி.பி. 66 மற்றும் 217 ஆகியவற்றுக்கு முரணாக, மாற்றல் பத்திரத்தின் ஊடாக மூலதன சொத்துக்களை அபகரித்தல்கள் இயந்திர மற்றும் இயந்திர உபகரண செலவுத் தலைப்பிலிருந்து வருடாந்த மதிப்பீட்டின் மூலமும் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத வேறு மூலதன செலவுகள் தலைப்பிற்கு மாற்றப்பட்டு ரூபா. 1,098,486 செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் அலுவலகத்தில் விசாரித்த போது நி.பி. 66 இன் பிரகாரம் ஒதுக்கீடு காணப்படுகின்ற செலவுத் தலைப்பின் ஊடாக ஒதுக்கீட்டினை மாற்றிக் கொள்ளுமாறு வாய் மொழி மூல அறிவுறுத்தல் கிடைத்தது. அவ்வனுமதியின் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணம் 217 மற்றுமன் நிதிப் பிரமாணம் 66 இன் ஏற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2023 பெப்ரவரி 09 திகதிய DFD/2023-1 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் 4.2 பிரிவிற்கு அமைவாக நெல் கொள்வனவு செய்வதற்கான செயற்பாட்டு செலவல்லாத ரூபா. 1,021,180 நெல் கொள்வனவு செய்வதற்கான செயற்பாட்டு செலவின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. | நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் அத்தியாவசிய பராமரிப்பிற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அரசிற்கு இலாபகரமான அடிப்படையில் செயற்பட்டுள்ளதாக | நிதியினை ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயங்களுக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி லுனுகம்வெஹெர புதிய பிரதேச செயலகக் கட்டட நிர்மாணம் தொடர்பான ரூபா. 13,828,552 பெறுமதியான இறுதிப் பட்டியலுக்காக கணக்காய்வுத் தினமாகிய 2024 ஏப்ரல் 03 ஆம் திகதி வரையிலும் பணம் செலுத்தப்படாமை காரணமாக பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ரூபா. 13,828,552 பெறுமதியான இறுதி பட்டியல் ஒப்பந்தக்காரர் மூலம் 2023.12.31 ஆம் திகதி மாவட்டப் பொறியியலாளருக்கு (கட்டிடம்) அனுப்பப்பட்டிருந்த போதும், நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக பொறுப்புகளுடன் உள்ளீர்க்கப்படவில்லை என்பதாக | பொறுப்புக்களை முறையாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |

## 2.3 வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அம்பாந்தோட்டை சுற்றுலா விடுதியை புனர் நிர்மாணம் செய்வதற்காக ரூபா. 4,255,852 பெறுமதிக்கான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு நி.பி. 137,138,139,237 (அ)(ை) மற்றும் 215(3) (அ) பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முறனாக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் 50 வீத நிறுத்தி வைக்கப்பட்ட நிதி தவிர்ந்த மீதித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. தாமதக் காலமாகிய 53 நாட்களுக்காக ரூபா. 89,154 தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்தக்காரரினால் நிறைவு செய்யப்பட்டுள்ள வேலைகளில் குறைபாடுகள் மற்றும் வருடத்தின் இறுதிப் பகுதி என்பதால் தொடர் வேலைக்காக நிதி பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் ஆகிய காரணங்களால் பட்டியல்கள் பரிசீலனை செய்யப்பட்டு கொடுப்பனவுக்காக பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. ளூரடிளவயவெயைடடல ஊழஅிடநவழைெ மட்டத்திற்கு வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததனால் கடைசி பட்டியலிலிருந்து ஒரு தொகையினை நிறுத்தி வைத்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை மாத்திரம் செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டதென | நிதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதன் பின்னர் அனுமதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | தங்கள்ளை பிரதேச செயலகத்தின் மூலம் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு அடிப்படை வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 நிதி ஒதுக்கீட்டின் கீழ் தங்கள்ளை நகரசபை விளையாட்டரங்கின் விளையாட்டு மைதானம் மற்றும் பாதுகாப்பு வேலி அபிவிருத்தி திட்டத்திற்கான சரியான விலை நியமங்கள் பயன்படுத்தப்படாததன் கரரணமாக ரூபா. 107,374 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மின்சார தொகுதிக்காக ரூபா. 211,144 செலவிடப்பட்டிருந்த போதும், 2024 மார்ச் 05ஆம் திகதி வரையிலும் செயற்பாட்டுத் தரத்தில் காணப்படவில்லை. ரூபா. 36,020 பெறுமதியான 04 மின்குமிழ்கள் மைதானத்தில் காணப்படவில்லை. | திட்டத்திற்கான மதிப்பீடு தயாரித்தல், மேற்பார்வை செய்தல், கொடுப்பனவுப் பட்டியல்களை சமர்ப்பித்தல் ஆகியன தங்கள்ளை நகரசபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன், இதற்கான பதிலை முன்வைக்குமாறு நகரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | மதிப்பீடு மற்றும் கொடுப்பனவு அறிக்கைகள் பிழையின்றி தயாரிக்கப்பட்டு மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | லுனுகம்வெஹெர பிரதேச செயலகத்தின் மூலம் குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் அம்பாந்தோட்டை உத்தியோகத்தரிகள் ஓய்வு விடுதி அமைந்துள்ள காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்காக ரூபா. 237,089 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக இயந்திரங்களை பயன்படுத்துவதில் காணப்பட்ட சிரமங்கள் மற்றும் கிரயம் அதிகரிக்கும் அபாயம் மற்றும் காணியில் இதற்கு முன்னர் பாத்தி அமைக்கப்பட்டு பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் இயந்திரப் பயன்பாட்டிற்கு கூடுதலான காலம் செலவாகும் என்பதனால் கைவிலை நியமம் பயன்படுத்தப்பட்டதாக | மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும் |
| (ஈ) | 2021 சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலஸ்முல்லை பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட இரண்டு வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட கற்களில் 25 வீதமானவை தரப் பரிசோதனையின் போது தரமற்றவை என கருதப்பட்ட நலையில், இவ்விரண்டு வீதிகளுக்கும் கல் பரத்துவதற்கான முழுத் தொகையாகிய ரூபா. 724,503 பூரணமாக செலுத்தப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக | வேலைகள் நிறைவுற்றனவா என்பதை பரிசீலனை செய்த பின்னர் கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமடையாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை ஓஐஓ ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | 299,408 | மாவட்ட செயலகத்திற்கு அல்லது திஸ்ஸமஹாராமை பிரதேச | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஏறபாடுகளுக்கு அமைவாக வீட்டு வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயலகத்திற்கு சொந்தமான 02 அரச வீடுகளுக்கான வீட்டு வாடகை மொத்தமாக ரூபா. 299,408 அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நி.பி. 137(5) மற்றும் 237 (ஆ) | 54,738,096 | அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக இளைஞர் விவசாய தொழில் முயற்சியாளர் கிராம முன்னோடி வேலைத் திட்டம் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப திட்டம் ஆகியவற்றுக்கான அனுமதிக்கப்பட்ட மற்றும் உறுதிப் படுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா. 14,637,900 பெறுமதியான வினியோகங்கள் 2024 ஜனவரி 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த அதேவேளை, கூட்டுத்தொகை ரூபா. 40,100,196 ஆகிய வினியோகங்கள் 2024 மார்ச் 28ஆம் திகதி வரை மேற்கொள்ளப் படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது | இருப்பு வினியோகத்தின் பின்னர் காசோலைகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் விரிகை நீர் வினியோகத் தொகுதியில் காணப்படும் சிறுசிறு குறைபாடுகளை சீர் செய்து காசோலைகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | நி.பி. 215(3) (அ) | 437,886 | கிட்டிய கொடுப்பனவுகளுக்காக நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியினை வைப்புக் கணக்கில் வரவு வைக்க முடியாதிருந்த போதும், மாவட்ட செயலகத்தின் மூலம் | கொங்ரீட் பரிசோதனை அறிக்கையில் வீதிப் பகுதியில் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக மாவட்டப் பொறியியலாளரின் பரிந்துரைப்புடன் அக் குறைபாடுள்ள | கிட்டிய கொடுப்பனவுகளுக்காக வைப்புக் கணக்கில் நிதி வரவு வைக்கப்படக் கூடாது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2023ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த "மெதகந்த தொல்தெனிய நீரோடைக்கு வடிகாண் பொருத்தும் திட்டத்தின் கொங்ரீட் பரிசோதனை அறிக்கையிலுள்ள குறைபாட்டின் அளவிற்கு 15 வீதமாகிய ரூபா. 437,886 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பகுதிக்கான நிதி மீண்டும் அக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டதாக | |
| (iii) | நி.பி. 315 | 1,937,656 | அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படாததன் விளைவாக அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் நடந்திருந்த ஒரு களவின் காரணமாக ரூபா. 1,937,656 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | பாதுகாப்புப் பெட்டியின் இரகசிய எண்ணைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சி மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் , காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நிதிக் கோவையின் பிரகாரம் செயற்படுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 மார்ச் 08 திகதிய 04/2022 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 4.2(ii) பிரிவு | 624,192 | உத்தியோகபூர்வ வாகனங்கள் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் தவிர்ந்த மேலதிக எரிபொருள் வழங்குவதை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்கு முரணாக 2022 மார்ச் தொடக்கம் 2023 திசம்பர் வரை மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் | அத்தியாவசிய கடமைகளுக்காக மாத்திரம் மேலதிக எரிபொருள் பெறப் பட்டுள்ளதுடன், அதற்காக அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக மற்றும் பிரதேச செயலாளரின் வேண்டுகோலின் பேரில் மாவட்ட செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேலதிக | சுற்றறிக்கை விதிமுறைகளுக்கமைவாக செயற்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகபூர்வ வாகனங்கள் உள்ள அரச உத்தியோக்த்தர் களுக்கு மேலதகமான 1,894.64 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா. 624,192 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | எரிபொருளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள தாக. | |
| (ஈ) | சுடுகலன்கள் சட்டத்தின் 22(2)(எ) பிரிவு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் 2022 செப்தம்பர் 19 திகதிய 02/2022 சுற்றறிக்கையின் 3.4 பிரிவு | 2023 ஜனவரி 10 ஆம் திகதிய அனுமதிப் பத்திரம் பெற முடியாது போன அனைத்து துப்பாக்கிகளையும் தற்காலிகமாக காரியாலயத்திற்லோ அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்திலோ ஒப்படைக்க வேண்டுமென அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக் கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதும், அதற்கு மாற்றமாக செயற்பட்டு, 2024 மார்ச் 19ஆம் திகதியாகும் பொழுது 12 பேர் 2023ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தும் 13 பேர் 2017 இற்கும் 2022 இற்கும் இடைப்பட்ட வருடங்களுக்காகவும் அனுமதிப்பத்திரங்களை ள புதுப்பித்திருக்கவில்லை ல. | 2023ஆம் ஆண்டுக்காக துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை ள புதுப்பித்துக்கொள்ளாத 25 அனுமதிப்பத்திர உரிமையாளர்களில் இருவர் 2024ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளனர். ஏனைய துப்பாக்கி அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் தொடர்பாக தேடியறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதா க | துப்பாக்கிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைவாக துப்பாக்கிகள் மற்றும் அனுமதிப்பத்திரங் கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுப்பனவுகள்

### அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகம் ருஹுனுபுர நிர்வாகக் கட்டிடத் தொகுதிக்கான சுத்திகரிப்பு சேவையினை வழங்கியமைக்கான கொடுப்பனவை மேற்கொள்ளும் போது சேவையை வழங்கிய நிறுவனத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்படாத தொழிலாளர்கள் மூவரின் பெயர்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு ரூபா. 238,256 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட தொழிலாளர்கள் மாவட்ட செயலக விடுதியில் சேவையாற்றிய தொழிலாளர்களாக இருந்ததுடன், அதனை உறுதிப்படுத்தி சுத்திகரிப்பு நிறுவனத்தின் மேற்பார்வை உத்தியோகத்தரிகள் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக | மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட வேண்டியதுடன், பிழையான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (பூரவஉழஅந) கிடைக்கப்பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டு சௌபாக்யா உற்பத்திக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் வீரகெடிய பிரதேச செயலகத்தின் மூலம் பெதிகம தெற்கு பிரிவில் 20 பயனாளிகளுக்கான தும்புத் தூரிகை திட்டமொன்றிற்காக ரூபா. 221,668 செலவிடப்பட்டிருந்த போதும், 2023 ஒக்டோபர் வரை அதில் 05 பயனாளிகள் மாத்திரம் திட்டத்தில் தங்கியிருந்தமையும் திட்டம் தோல்வியடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | தும்புத் தூரிகை உற்பத்தியினை வெற்றிகரமாக மேற் கொள்ளுகின்ற வேறொரு சங்கத்தின் வேண்டு கோலின் பேரில் இயந்திரம் அச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக. | திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் அடையப்படல் வேண்டும். |
| (ஆ) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த சமுர்த்தி அருனலு தொழிற்பயிற்சி பாடநெறி மூலம் தொழிற்பயிற்சியும் தொழில் அபிவிருத்தி மூலம் தொழிலின்மையைக் குறைத்தலும் நோக்கங்களாக இருந்த போதும், 48 பயனாளிகளுக்காக 04 பிரதேச செயலகங்கள் மூலம் ரூபா. 1,728,000 செலவிடப்பட்டு சுமார் 02 வருடங்கள் ஆகியிருந்த போதும், பயிற்சிப் பாடநெறியை கற்றிருந்த 03 மாணவர்கள் மாத்திரம் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளமை | 2021 ஆம் ஆண்டு காணப்பட்ட கொவிட் பரவல், நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் ஹோட்டல் முறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் ஏதேனுமொரு தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு மக்கள் முற்பட்டனர். தற்பொழுது ஹோட்டல் துறையில் வளர்ச்சி ஏற்பட்டு | எதிர்பார்த்த பிரதிபலனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன், திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | வருவதனால் எதிர்காலத்தில் அப் பயிலுனர்களை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | |
| (இ) | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் 2020ஆம் ஆண்டு சபிரி கமக், மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 1,887,827 செலவில் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் மக்களுக்கு சுகாதார ரீதியான உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு ஹெல பொஜுன் ஒன்றிற்கான கட்டடம் அமைக்கப்பட்டு 02 வருடங்களைக் கடந்திருந்த போதும், அக் கட்டடம் எதிர்பார்த்த தேவைக்காகப் பயன்படுத்தப்படாது பயன்பாடற்றுக் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டுக்காக செயற்படுத்தப்படும் வரவு செலவு திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் எஞ்சியுள்ள வேலைகளை நிறைவு செய்வதற்காக ரூபா 2 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவு அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை மாநகர சபையின் கண்காணிப்பின் கீழ் தொழில் முயற்சியாளர் சங்கத்திற்கு உணவகத்தின் நடவடிக்கைகளை பராமரிப்பதற்கான பொறுப்பினை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாக | திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படல் வேண்டும். |
| (ஈ) | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் மூலம் 2022ஆம் ஆண்டு கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கமநல சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 477,543 பெறுமதியான கொம்போஸ்ட் உற்பத்தி இயந்திரமொன்று, இரண்டு மின்சார மோட்டர்கள் மற்றும் ஒரு நீர்த்தாங்கி ஆகியன 2023 நவம்பர் 03ஆம் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்படாது பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டன. | இவ்வுபகரணங்களை வேறொரு சங்கத்திற்கு வழங்கும் நோக்கில் பொருத்தமான வேறொரு சங்கத்தைப் பெயரிட்டுத் தருமாறு இரண்டு கமநல சேவை அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அந்நிறுவனங்களால் பெயர் குறிக்கப்படுகின்ற அமைப்பிற்கு உபகரணங்களைக் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படல் வேண்டும். |

### 3.2 பணம் விடுவிக்கப்பட்ட போதும் செயல் முன்னேற்றம் காணாத செயற்றிட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 12 பிரதேச செயலகங்களினுள் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியில் கிராமிய சக்தி சங்கங்கள் எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற 111 வங்கிக் கணக்குகளில் 2023 திசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 33,629,869 நிதி 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தொடக்கம் பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டது. இதில் 06 பிரதேச செயலகங்களின் 13 கிராமிய சக்தி சங்கங்கள் மூலம் சுழற்சி கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா. 5,144,225 கடன் தொகையில் 2023 திசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 1,282,212 கடன் தொகை மற்றும் ரூபா. 52,824 நிலுவை வட்டியுடன் சேர்த்து மொத்தம் லுபா. 1,335,036 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிராமிய சக்தி சங்கங்கள் குறித்ததொரு காலப்பகுதியில் தொழிற்படாத நிலையில் காணப்பட்ட போதும், தற்பொழுது தொழிற்பாடற்ற சங்கங்களை தொழிற்படு நிலைக்கு மாற்றவோ அல்லது அவற்றைக் கலைத்து விட்டு அரச நிதியினை வேறு சங்கங்களுக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2024 பெப்ரவரி மாத இறுதியாகும் பொழுது நிலுவை கடன் தொகை ரூபா. 1,104,225 ஆகவும் வட்டி ரூபா. 44,551 ஆகவும் குறைந்துள்ளதாக | ஒதுக்கப்பட்ட நிதியினை பலனுள்ள வகையில் உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அதேவேளை, தாமதமின்றி குறித்த காலப்பகுதியினுள் கடன்களை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 உள்நாட்டு நிதியின் மூலம் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) லுனுகம்வெஹெர பிரதேச செயலக ஆலவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | | |
| (i) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிர்மாண ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் மூலம் பொறியியல் மதிப்பீட்டினை விட குறைவான ரூபா 113,816,772 எனும் விலை வழங்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் அந் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமனு தரமற்றதெனக் குறிப்பிட்டு அவ் விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அது 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8(ஈ) பிரிவின் பிரகாரம் விலைமனுவினை நிராகரிக்கும் அளவிலான பாரிய காரணம் ஒன்றல்லாதிருந்ததனாலும், 7.9.2 (க) பிரிவின் பிரகாரம் விலைமனுக்களில் | ஏற்றுக்கொள்ளப்பட்ட படிவத்திற்கு அமைவாக விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அறிவுறுத்தல்களை புறக்கணித்தமை காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் விலைமனு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. இத் திட்டத்தின் முதல் கட்டத்தின் நிர்மாண ஒப்பந்தம் புறக்கணிக்கப் | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைவாக பெறுகைகள் செயற்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டிய அதேவேளை, ஏற்பட்டுள்ள நட்டத்தினை, ஒப்பந்தத்தினை |

| | | | |
|---|---|---|---|
| | அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாகன தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக விலைமனுதாரரிடம் வேண்டுகோல் விடுக்க முடியுமாக இருந்த போதும், அவ்வாறின்றி அவ் விலைமனு நிராகரிக்கப்பட்டு பொறியியல் மதிப்பீட்டினை விட 11.05 வீத அதிக விலையுடன் கூடிய ரூபா. 127,587,772 தொகையினை வழங்கியிருந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கியமையின் மூலம் அரசிற்கு ரூபா. 13,771,092 நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பட்டு கைவிடப்பட்ட ஒன்றாகும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் பெறுகைகள் குழு செயற்பட்டுள்ளதாக. | கையளித்தல் தொடர்பில் வகை கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |
| (ii) | கட்டிடத்தின் மேல் மாடியில் பலகை மேடையினை அமைப்பதற்கான கபுதிக் கொடுப்பனவாக ரூபா. 2,694,989 (வுஐைஅடிநச ளுவயபந) செலுத்தப்பட்டிருந்த போதும், பயன்படுத்தப்பட்டிருந்த பலகைகள் வலைந்து காணப்பட்டமை, பழுதடைந்திருந்தமை மற்றும் நல்ல நிலையில் இல்லாமை ஆகிய காரணங்களால் 2023 ஆகஸ்ட் 17 கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின் பொழுது மீண்டும் கழறுகின்ற நிலையில் இருந்தது. அதேபோன்று மேடையை அமைப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பலகையினை பயன்படுத்துவதற்கு செலவிடக்கூடிய தொகை ரூபா. 2,480,950 ஆகவிருந்த போதும், ரூபா. 2,584,433 செலவிடப்பட்டமை காரணமாக ரூபா. 200,230 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | பலகைகளுக்கிடையில் இடைவெளி காணப்பட்டமை காரணமாக மேடையின் பலகைகள் கழற்றப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரரினால் கொண்டுவரப்பட்ட பலகைகளின் பெறுமதி அதிகரித்திருந்தமை காரணமாக கூடுதலான தொகை வேலைத்தளத்தில் உள்ள பொருட்களின் கீழ் செலுத்தப்பட்டுள்ளதாக | ஒப்பந்தத்தினதும் மதிப்பீட்டினதும் அடிப்படையில் வேலைகள் நிறைவு செய்யப்படாதவிடத்து கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடாதென்பதுடன் கூடுதலாகச் செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | கட்டிடத்தின் முதல் கட்டத்தில், கூரை நிர்மாணத்திற்கு தேவையான 05 காப்பைகள் தயாரிக்கப்பட்டிருந்த போது தவறுதலாக இரண்டாவது கட்டத்தில் அதற்காக ரூபா. 1,688,750 மதிப்பிடப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தக்காரர் ரூபா. 3,809,000 தொகைக்கு சம்மதித்திருந்தார். முறையான தெளிவின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை காரணமாக ஒப்பந்தக்காரருக்கு 20 வீத முற்பணமாக ரூபா. 761,800 கூடுதலாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | வேலைத்தளத்திலிருந்த காப்பைகள் முதல் ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்பட்டவையாகும். அவரால் கூரை வேலைகள் நிறைவு செய்யப்படாமை காரணமாக இதற்காக பணம் செலுத்தப்பட வில்லை. இரண்டாவதாக வேலை மேற்கொள்ளப்பட்ட போது முதல் ஒப்பந்தக்காரர் அவற்றை எடுத்துச் செல்லாமையினால் பாவனைக்கு எடுக்கப்பட்டுள்ளதாக | மேலதிக முற்பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டமை தொடர்பில் வகை கூற வேண்டிய உத்தியோகத்தரிகளுக் கெதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | ஒவ்வொரு பட்டியலுடனும் தொடர்பான வேலைகளுக்கான கால வரையறைகள் சரியாக இனங்காணப்படாது அதிகரித்த விலைகளுக்குரிய கொடுப்பனவுகள் | ஓஏ ஆவது பட்டியலின் மூலம் ஒப்பந்தக்காரருக்கு நட்டம் ஏற்படும் வகையில் ஜுன் மாதத்திற்கான | மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டமை காரணமாக 03 பட்டியல்களின் கூட்டுத்தொகை ரூபா. 160,658 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | சுட்டிகளின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. இறுதிப் பட்டியலின் அனைத்து சுட்டிகளும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு சரியாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் பயன்படுத்தப்படும் முறையாக இருக்கின்ற அதேவேளை, ஓஏ ஆவது பட்டியலிலும் அதேபோன்று அனைத்து விடயங்களும் பரிசீலிக்கப்பட்டு கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக | |
| (v) | கட்டடத்தின் மலசலகூடத்திற்கான நிலக்கல் (குடழழச வுடைந) பொருத்துகையில் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு அமைவாக செயற்படாது மாற்றப்பட்ட வேலைகளின் (எயசயைவழைெ ழைசம) கீழ் வேறு அளவிலான நிலக்கற் களை பொருத்துவதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை காரணமாக ஒப்பந்தக்காரர் பொருந்திய தொகைக்கு மேலதிகமாக ரூபா. 984,948 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமை காரணமாக எதிர்பார்த்த வகையிலான நிலக்கற் களை கொள்வனவு செய்ய முடியாமல் போனது. அதனடிப்படையில் சந்தையில் கிடைக்கப் பெற்ற 2ஓ4 அடி அளவிலான நிலக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக | ஒப்பந்தக்காரர் பொருந்திய விதத்தில் வேலைகளை நிறைவு செய்யாததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவிட வேண்டியதுடன், வகை கூற வேண்டிய உத்தியோகத்தரிகளுக் கெதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | கருங்கல் மதிலினை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா. 287,162 ஆகவிருந்த போதும், விலை அதிகரிப்பிற்காக ரூபா. 735,058 செலுத்தப்பட்டிருந்தது. அது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 256 வீத அசாதாரண விலை அதிகரிப்பாகும் எனவும், அதனடிப்படையில் கருங்கல்லிற்கான நிறையளித்தல் சரியாக கணக்கிடப்பட்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை அறவிட வேண்டுமென அவதானிக்கப்பட்ட.. | விலை அதிகரிப்பிற்கான கொடுப்பனவு முறையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட காலத்தினுள் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கான அவகாசம் இல்லை. முதலில் தீர்மாணிக்கப்படுகின்ற சதவீதத்திற்கு அமைவாக ஊஐனுயு நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறையின் பிரகாரம் கொடுப்பனவுகளை பரிந்துரை செய்யும் செயற்பாடானது மாவட்டப் பொறியியலாளரின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக | வேலைத் தலைப்பு களுக்கான விலை அதிகரிப்பிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முறையான நிறையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யப்படாததன் காரணமாக கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | மதிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் வேலைகளை நிறைவு செய்யாமை மற்றும் உள்ளீடுகளுக்காக நிறை குறித்தல் மேற்கொள்ளாமை ஆகிய காரணங்களால் விலை அதிகரிப்பிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிலக்கற்கள் (குடழழச வுடைந), சட்டக இரும்பு (ளுவசரஉவரசயட ளவநநட) அலுமினியம் கதவு யன்னல்கள் மற்றும் பலகை ஆகிய வேலைகளுக்கான கூட்டுத்தொகை ரூபா. 9,967,761 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிலக்கற்களுக்கான மேலதிக கொடுப்பனவானது ஒஏ பட்டியலின் மூலம் கழிக்கப்பட்டுள்ளதாக, ஏனைய வேலைகள் தொடர்பான விலை அதிகரிப்பிற்கான கொடுப்பனவு முறையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட காலத்தினுள் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கான அவகாசம் இல்லை. முதலில் தீர்மானிக்கப்படுகின்ற சதவீதத்திற்கு அமைவாக ஊஐனுயு நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறையின் பிரகாரம் கொடுப்பனவுகளை பரிந்துரை செய்யும் செயற்பாடானது மாவட்டப் பொறியியலாளரின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக. அனுமதிக்கப்பட்ட சீமெந்து வகை ஒன்றினை பயன்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரருக்கு முடியும். அதனடிப்படையில் ஆ1, ஆ2, ஆ3 ஆகிய எந்தவொரு வகைக்கும் பொதுவான ஆ4 வகையே பயன்படுத்தப்படுகின்றது என்பதாக | மேலதிக கொடுப்பனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்ெ கதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (viii) | 2023 மே 31ஆம் திகதியன்று வேலைத்தளத்தில் காணப்படாத 23 வகையான பொருட்களுக்காக அவற்றின் பெறுமதியின் 80 வீதம் மற்றும் அப் பொருட்களின் விலை அதிகரிப்பினைக் கணக்கிட்டு ரூபா. 8,563,471 தொகையினை ஒப்பந்தக்காரருக்கு ஏலவே செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒஏ பட்டியலின் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. பட்டியல் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பத்தில் குறித்த பொருட்கள் வேலைத் தளத்தில் இல்லாதிருந்த போதும், பட்டியல் பரிசீலிக்கப்பட்டு மீண்டும் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொருட்கள் வேலைத்தளத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தமை காரணமாக கொடுப்பனவுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக | பட்டியல் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் உண்மையாக வேலைத்தளத்தில் காணப்படும் பொருட்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ix) | கட்டிட நிர்மாண வேலைகளுக்காக ரூபா. 127,587,894 தொகைக்காக ஒப்பந்தக்காரர் இணக்கமடைந்து அதன் 20 வீத முற்பணமாக ரூபா. 25,302,572 | முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படுவது ஆரம்ப ஒப்பந்தத் தொகையின் ஒரு சதவீதமாகும். | மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், ஒப்பந்தக்காரர் இணக்கமடைந்த ரூபா. 47,094,286 பெறுமதியான 191 வேலைகள் நிறைவேற்றப்படாததன் காரணமாக ரூபா. 9,418,857 முற்பணத் தொகை மேலதிகமாக ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தினதும் நடைமுறையிலுள்ள முறைமையினதும் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |
| (x) | ஒப்பந்தத்தின் படி பொறியியலாளர் ஒருவர் வேலைத்தளத்தில் முழு நேர மேற்பார்வையில் ஈடுபடாத போதும், ஒப்புக்கொள்ளப்பட்ட முழுச் சம்பளத் தொகையாகிய ரூபா. 1,080,000 செலுத்தப்பட்டிருந்தது. | இரண்டு ஒப்பந்தங்களும் எதிர்பாராத விதமாக ஒரே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தமை காரணமாக அந் நிறுவனத்தின் பொருளியலாளருக்கு எமது இரண்டு திட்டங்களையும் மேற்பார்வை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 2022 ஒக்தோபர் வரை லுனுகம்வெஹெர திட்டத்தின் மூலம் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்பட்டமை தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அங்குனுகொலபெலெஸ்ஸ புதிய பிரதேச செயலக கட்டிடத்தினை நிர்மாணித்தல் - கட்டம் ஐஐ. | | |
| (i) | பொறியியல் மதிப்பீட்டுத் தொகையான ரூபா. 202,233,895 இற்கு மேலதிகமாக 11.06 வீத விலை அதிகரிப்புடன் மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா. 224,616,800 விலைகளின் அடிப்படையில் நேரடியாக அந் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அவ்வாறிருந்தும், ஒதுக்கப்படும் திருத்தப்பட்ட நிதியின் அடிப்படையில் மீளத் தயாரிக்கப்பட்ட ரூபா. 58,658,156 ஆகிய பொறியியல் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 30.5 வீத விலை அதிகரிப்புடன் ரூபா. 76,604,246 தொகைக்கு மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்திற்கு பிரதேச செயலாளரினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதும், அதற்கான பெறுகைகள் குழுவினதும் அமைச்சரவையினதும் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | முதல் ஒப்பந்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மாணத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் மீள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு அது தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத் தரப்பாகிய மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்தின் வேண்டுகோலின் பிரகாரம் திருத்தப்பட்ட ஒப்பந்தமொன்றினை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. | அமைச்சரவையினால் பரிந்துரைக்கப்பட்ட விலை அதிகரிப்பு எல்லையைக் கடந்து, அமைச்சரவையினதும் பெறுகைகள் குழுவினதும் அங்கீகாரம் பெறப்படாது வழங்கப்படுவதற்கு வகை கூற வேண்டிய தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | போட்டி அடிப்படையிலான விலை மனுக்கோரல் இன்றி நேரடியாக மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்திற்கு நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டதன் காரணமாக பங்கிலாப வீதம் 27 எனக் குறிப்பிட்டு அலகிற்கான விலை கணக்கிடப்பட்டதன் காரணமாக ரூபா. 68,646,596 ஆகிய மொத்த வேலைப் பெறுமதியின் 7 வீதமாகிய ரூபா. 3,783,670 மேலதிக இலாபம் ஒப்பந்த நிறுவனத்திற்கு கிடைத்திருந்ததுடன், அப் பெறுமதியில் அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | இத் திட்டத்திற்கான பிரமாணப் பத்திரத்தில் உள்ளடங்கியிருந்த சகல வேலைத் தலைப்புகளுக்குமான விலைகள், விலை மீளாய்வுகள் அமைச்சின் கீழ் இயங்கும் நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அங்கு அவ் விலைகள் பரிசீலிக்கப்பட்டு தேவையான மாற்றங்களுடனான திருத்தப்பட்ட விலைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் இந் நிறுவனத்திற்கு இலாபமீட்ட முடியாதுள்ள அதேவேளை அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் செயற்பட்டுள்ளதாக | அரச நிதியானது சிக்கனமாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன், 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கமைவாக செயற்படல் வேண்டும். |
| (iii) | ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 15,290,849 முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்த போதும், நிறைவு செய்வதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த ரூபா. 27,635,879 பெறுமதியான 40 வேலை விடயங்கள் நிறைவு செய்யப்படாமை காரணமாக ரூபா. 5,527,176 முற்பணத் தொகை மேலதிகமாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படுவது ஆரம்ப ஒப்பந்தத் தொகையின் ஒரு சதவீதமாகும். ஒப்பந்தத்தினதும் நடைமுறையிலுள்ள முறைமையினதும் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக மாத்திரம் முற்பணம் வழங்கப்படல் வேண்டும். நிறைவு செய்யப்படாத வேலைகளுக்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |
| (iv) | நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடத்தின் சுவர்களில் 72 இடங்களில் மொத்தம் 79.7 மீற்றர் அளவான வெடிப்புகளும், கொங்ரீட் தூண் ஒன்றில் 0.7 மீற்றர் அளவான வெடிப்பொன்றும், மலசலகூட சுவர் ஒன்றில் 3.6 மீற்றர் அளவான வெடிப்புகளும் அவதானிக்கப்பட்டன. | செங்கல் மற்றும் கொங்ரீட் ஆகியவற்றின் இரசாயன உள்ளீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இவ் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. நிறுத்தி வைத்தல் தொகை செலுத்தப்படுவதற்கு முன்னர் இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணிசமான குறைபாடுகள் காணப்படுமிடத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | கட்டடத்தின் கீழ் மாடி மற்றும் முதல் மாடிகளில் நிலத்தின் 24 இடங்களில் மொத்தமாக 366.79 சதுர மீற்றர் அளவான வெடிப்புகள் ஏற்பட்டிருந்த போதும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது நிலத்திற்கான சீமெந்து பூச்சு வேலைக்காக ரூபா. 3,794,920 ஆகிய மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுத்தி வைத்தல் தொகை செலுத்தப்படுவதற்கு முன்னர் இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணிசமான குறைபாடுகள் காணப்படுமிடத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் கூடாது. |
| (vi) | திட்டத்தின் இறுதி கொடுப்பனவு பட்டியலின் அடிப்படையில், செலுத்தப்பட்ட ரூபா. 17,592,958ஆகிய விலை அதிகரிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா. 9,455,432 நிலக்கற்கள் (குடழழச வுடைந), சட்டக இரும்பு (ளுவசரஉவரசயட ளவநநட) அலுமினியம் கதவு யன்னல்கள் அடிப்படைக் கிரயத்தின் கீழான வேலை விடயங்கள், சீமெந்து வகை சரியான முறையில் தெரிவு செய்யப்படாமை மற்றும் பட்டியல் கால வரையறை சரியாக இனங்காணப்படாமை ஆகிய விடயங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக கொடுப்பனவாகும் என்பது அவதானிக்கப்பட்டது. | ஈடுபடுத்தல் சதவீதமானது பொறியியல் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மாற்றப்பட வேண்டிய தேவைகள் பூரணப்படுத்தப்படாமை காரணமாக சதவீதத்தில் மாற்றம் செய்யாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படைக் கிரயத்தின் மீதான மேலதிகக் கொடுப்பனவுகளை எதிர்காலப் பட்டியல்கள் மூலம் திருத்தியமைப்பேன். அனுமதிக்கப்படுகின்ற சீமெந்து வகை ஒன்றினை பயன்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரருக்கு முடியும். அதன்படி குறித்த வேலைகளுக்காக ஆ4 பொது வகை பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று பட்டியல் ஏஜ இனை சமர்ப்பிக்கும் போது நவம்பர் குறிகாட்டி வெளிப்படுத்தப்படாதிருந்தது டன், வேலைகள் நிறைவடைந்ததன் பின்னர் வழங்கப்படும் பட்டியல் மூலம் அக் குறிகாட்டியைப் பயன்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட உள்ளதாக | மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டியதுடன், விலை அதிகரிப்பு எனும் அடிப்படையில் ஒப்பந்தக்காரருக்கு மேலதிக கொடுப்பனவை மேற்கொண்ட உத்தியோகத்தரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vii) | 2022 டிசம்பர் 31 அன்று வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த கட்டடத்தின் இரண்டாவது கட்டத்தின் ஒப்பந்தக் காலம் 243 நாட்களால் நீடிக்கப்படும் பொழுது அந் நீடிப்பின் காரணமாக செலுத்தப்பட வேண்டி ஏற்படுகின்ற விலை அதிகரிப்புப் பெறுமதி அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தாது ஒப்பந்தக் காலம் | 2022 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிக்கல்கள் ஆகிய ஒப்பந்தக்காரர் முன்வைத்த காரணங்கள் தொடர்பாக | ஒப்பந்தம் நீடிக்கப்படும் பொழுது அரசாங்கத்திற்கு ஏற்படும் மேலதிக செலவினத்தைக் கருத்திற் கொண்டு அரச நிதி சிக்கனமாகப் பயன்படும் விதத்தில் நாட்களை நீடிப்புச் |

| | | | |
|---|---|---|---|
| | நீடிக்கப்பட்டமை காரணமாக ஒப்பந்தத் தொகையின் 23 சதவீதமாகிய ரூபா. 17,592,958 விலை அதிகரிப்புத் தொகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பொறியியலாளர் திருப்தி கண்டுள்ளமையினால் நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளதாக | செய்தல் வேண்டும். |
| (viii) | நிர்மாண ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டட நிர்மாண வேலைகளின் மேற்பார்வைக்காக முழு நேர பொறியியலாளர் ஒருவரை ஈடுபடுத்தாது லுனுகம்வெஹெர கட்டடத்தின் நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்கின்ற அதே பொறியியலாளரே மேற்படி விடயத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டமை காரணமாக பொறியியல் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 299,000 தொகை மேலதிக கொடுப்பனவாகும் என அவதானிக்கப்பட்டது. | லுனுகம்வெஹெர பிரதேச செயலக திட்டத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மாதங்களில் அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலக திட்டத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை | நிர்மாண ஒப்பந்தத்தின் அடிப்படையில் முழு நேர பொறியியலாளர் ஒருவரை ஈடுபடுத்தாததன் காரணமாக சம்பளமாக மேலவிகமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 2022ஆம் ஆண்டு கிராமத்துடன் ஒரு கலந்துரையாடல் கிராம அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வலஸ்முல்லை பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட 03 வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கற்களில் 12.5 வீதம், 25 வீதம் மற்றும் 50 வீதம் என பொருத்தமற்றதாக இருந்த நிலையில், அது தொடர்பாக கவனம் செலுத்தாது அம் 03 வீதிகளுக்கும் கல் பதிப்பதற்காக மொத்தமாக ரூபா. 2,364,133 செலுத்தப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள னுளுர்.˙.னூளு.˙.14.˙ிசழ.˙.அந நவபெ.˙.2020 கடிதம் மற்றும் இணைப்பின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பரிசீலிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 (அ) பிரிவின் பிரகாரம் பெறுமதி குறைந்த, உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியுமான பொருட்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளைக் கொண்ட பெறுமதி குறைந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட முடியுமாக இருந்த போதும், திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் மூலம் 2022ஆம் ஆண்டு மொத்தம் ரூபா. 5,265,824 பெறுமதியான 118 நீர் பம்புகள் கொள்வனவு செய்யப்படும் பொதும், மாவட்ட செயலகத்தினால் இளைஞர் விவசாய தொழில் முயற்சியாளர் | ஒரே தடவையில் அதிகளவான நீர் மோட்டர்களை கொள்வனவு செய்வதற்கான தேவை காணப்படாததன் காரணமாக மற்றும் 2022ஆம் ஆண்டு காலாண்டு அடிப்படையில் கணக்குகளை தீர்த்து வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அவசரமாக கொள்வனவுகளை செய்ய வேண்டியிருந்ததனால் தேசிய போட்டி அடிப்படையிலான விலை மனுக் கொரலின்றி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டத்திற்கு தேவையான கூடுதலான பொருட்கள் | திட்டங்களுக்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும் போது 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மிகவும் பொருத்தமான பெறுகைகள் நடைமுறையினை தேர்ந்தெடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | முன்னோடி திட்டத்திற்காக மொத்தப் பெறுமதி ரூபா. 63,787,698 கொண்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது தேசிய போட்டி அடிப்படையிலான விலை மனுக் கொரலின்றி சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட்டு விலை கோரப்பட்டிருந்தது. | இறக்குமதி செய்யப்பட்டு வினியோகம் செய்து பொருத்தப்பட வேண்டியிருந்ததனால் பெறுகை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக இளைஞர் விவசாய தொழில் முயற்சியாளர் முன்னோடி திட்டத்திற்கான ஒரே தடவையில் விலைமனு கோரப்பட்டதாக | |
| (ஆ) | 2020 மார்ச் 25 ஆம் திகதிய அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிற்சேர்க்கை இல. 35இன் பிரகாரம் மாவட்ட மற்றும் பிரதேச பெறுகைகள் குழுவின் பொருள் பெறுகை நடவடிக்கைகளுக்கான அதிகார எல்லைகள் முறையே ரூபா. 10 மில்லியன் மற்றும் ரூபா. 1 மில்லியனாக இருந்த போதும் மாவட்ட செயலகம் மற்றும் லுனுகம்வெஹெர, கடுவன மற்றும் பெலிஅத்தை பிரதேச செயலகங்களின் மூலம் அவ்வெல்லைகளைத் தாண்டி 22 சந்தர்ப்பங்களில் ரூபா. 72,079,992 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு தேவையான அதிகமான பொருட்களை இறக்குமதி செய்யப்பட வேண்டி ஏற்பட்டமை, உள்ளிட்ட பெறுகை நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக அனைத்து திட்டங்களுக்குமான விலைமனு ஒரே தடவையில் கோரப்பட்டுள்ளதாக,லுனுகம்வெஹெர மற்றும் கடுவன பிரதேச செயலகங்களுக்கு எதிர்காலத்தில் பெறுகை குழு எல்லைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மற்றும் பெலிஅத்தை பிரதேச செயலகத்தின் மூலம் அதிக எண்ணிக்கையான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருந்ததன் காரணமாக மாவட்ட பெறுகைகள் குழுவின் ஆவரண அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாக. | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவாக உத்தியோகத்தரிகள் செயற்படல் வேண்டும். |
| (இ) | மாகம் ருஹுனுபர நிருவாகக் கட்டடத் தொகுதியின் 2023/2024 வருடங்களுக்கான சுத்திகரிப்பு சேவை வழங்கும் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் தென் மாகாண பிரதி தொழில் ஆணையாளர் மூலம் பரிந்துரைக்கப்பட்ட, குறைந்தபட்ச விலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரரின் விலைமனு நிராகரிக்கப்பட்டு 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.2 பிரிவுடன் தொடர்பான பெறுகைகள் செயற்பாட்டுக் | 2018ஆம் ஆண்டு நிருவாகக் கட்டடத் தொகுதியின் புல் நிலத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தில் கலந்துகொண்டு ஏற்றுக்கொள்ள முடியாத பட்டியல்களை சமர்ப்பித்ததன் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கை தொடர்பான பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அந் நிறுவனத்தின் விலைமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவாக உத்தியோகத்தரிகள் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் 7.9.2 (ஓ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் செயற்படாது, மூன்றாவது குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா. 1,871,829 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிராமப் புறங்களில் வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக | | |
| (i) | முன்மொழியப்பட்ட வீடுகளை அண்டி ஆடு வளர்க்கும் திட்டம்.<br>மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா. 17,910,000 ஆகிய இத் திட்டத்திற்காக 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 பிரிவின் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையில் விலைமனு கோரல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும், அதற்கு மாற்றமாக சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், விதந்துரைகள் உள்ளடங்கிய முறையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |
| (ii) | பிரதேச விலைமனுக் கோரலின் போது விலங்குகளுக்கான மொத்தத் தேவையில் 69 வீதத்திற்கான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யாத இரண்டு வினியோகஸ்தர்களிடமிருந்து 139 விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்த வினியோகஸ்தர்களிடமிருந்து விலங்குகள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | வினியோகங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் பொழுது பயன்படுத்த வேண்டிய 03 பதிலீட்டு விலைகள் பெறுகைகள் குழுவினால் தீர்மாணிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலைகளை விட கூடுதலான விலை செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 1,540,661 அரச நிதி வெளித் தரப்பினருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடுவன பிரதேச செயலகத்தின் மூலம் 2021ஆம் ஆண்டு சௌபாக்ய உற்பத்திக் கிராம வேலைத்திட்டம் மற்றும் சமுர்த்தி வாழ்வாதார வேலைத்திட்டங்களுக்காக தச்சு இயந்திரங்கள் கொள்வனவின் பொது, 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.5.1 பிரிவிற்கு மாற்றமாக, ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலைகள் கோரப்பட்டு ரூபா. 2,472,000 பெறுமதியான 16 தச்சு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக நேரடியாக இறக்குமதி செய்து வினியோகம் செய்யும் ஒரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மாணிக்கப்பட்டதாக. | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |
| (ஊ) | கடுவன பிரதேச செயலகத்தின் மூலம் 2022 கிராமத்துடன் ஒரு கலந்துரையாடல் மற்றும் சமுர்த்தி வீட்டுடன் தங்கிய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் - 2021 இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 838,100 பெறுமதியான 18 நீர் மோட்டர்கள் விதந்துரைகளுடன் இணக்கமடையாத கோரப்பட்ட வகையைச் சாராத நீர் மோட்டர்கள் என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய பொருட் தட்டுப்பாடு காரணமாக கோரப்பட்ட வகையிலான நீர் மோட்டர்களை சந்தையில் கொள்வனவு செய்ய முடியாமல் பொனதால், பயனாளிகளின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் பொருட்கள் பெறப்பட்டுள்ளதாக மற்றும் நிதி ஒதுக்கீட்டின் அளவிற்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக | விதந்துரைகளுக்கு அமைவாக பொருட்கள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும் |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013ஆம் ஆண்டுக்கு முன்னர் பெலிஅத்த பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த, 10 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்படாத, செயற்பாட்டு நிலையில் இல்லாத 02 மின் பிறப்பாக்கிகளை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது பொருத்தமான செயற்பாட்டினை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒரு மின் பிறப்பாக்கி பயன்படுத்தப்படாதுள்ளதுடன் மற்றொரு மின் பிறப்பாக்கியை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் இலக்கு வைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான ஒரு முச்சக்கர வண்டி மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் முறையே 10 வருடங்கள் மற்றும் 05 வருடங்களாக பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டன. | மோட்டார் சைக்கிளின் பதிப்புரிமையினை மாவட்ட செயலாளரின் பெயருக்கு மாற்றி அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாகவும், முச்சக்கர வண்டியினை மோட்டார் வாகன | சொத்துக்கள் இலக்கு வைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பரிசோதகருக்கு சமர்ப்பித்து அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக | |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் சௌபாக்யா உற்பத்திக் கிராம வேலைத்திட்டம் 2021 இன் கீழ் கேலியபுர மட்பாண்டத் தொழிலாளர் சங்கத்திற்காக ரூபா. 769,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் விதந்துரைகள், பயனாளிகளின் தேவைகளோடு பொருந்தாததன் காரணமாகவும் மற்றும் மீண்டும் மீண்டும் பழுதடைந்ததன் காரணமாகவும் 2023 யூலை மாதம் தொடக்கம் அவ்வியந்திரம் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தது.இதன் காரணமாக திட்டத்தின் நோக்கம் நிறைவேறாதிருந்ததுடன், இயந்திரத்திற்காக செலவிடப்பட்ட ரூபா. 769,000 தொகை பயனற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | இயந்திரத்தின் தொழிற்படு முறைமையில் ஒரு மாற்றத்தினை மேற்கொள்வதற்கான கவனத்தை செலுத்துமாறும், இயந்திரத்தினை சீர் திருத்தம் செய்து சங்கத்திடம் கையளித்ததன் பின்னர் முன்னேற்றம் தொடர்பாக அறியத்தருவதாகவும் | திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படல் வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022/2023 பெரும்போகத்தின் போது அரசின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் இருப்பினை வெளியேற்றல் வேலைத்திட்டத்துடன் தொடர்பான திரைசேரி செயலாளரின் DFD/2023-1 இலக்கமும் 2023 பெப்ரவரி 09 திகதியும் கொண்ட சுற்றறிக்கையின் 2.3.5 பிரிவின் பிரகாரம் 08 பிரதேச செயலகங்களின் மூலம் நெல் இருப்பின் உண்மையான ஈரலிப்பு சதவீதத்திற்குப் பதிலாக மொத்த நெல் இருப்பின் ஈரலிப்பு சதவீதம் 22 என தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில், கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒவ்வொரு 100 | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நெல் கொள்வனவின் போது திரைசேரி செயலாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கிலோ ஈரமடைந்த நெல்லிலிருந்தும் 12.5 கிலோ வீதம் அதாவது 10,340,983 கிலோ நெல்லிலிருந்து 1,292,623 கிலோ நெல்லினை ஈரலிப்பிற்காக நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நீக்கப்பட்டிருந்த நெல்லின் கொள்வனவுப் பெறுமதி ரூபா. 113,750,824 ஆகவிருந்தது. | | |
| (ஆ) | 2023 பெப்ரவரி 09 திகதிய DFD/2023-1 ஆம் இலக்க் திரைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1.3 ஆம் பிரிவு மற்றும் மகளிர், சிறுவர் விவகார மற்றும் 2023 மார்ச் 23 திகதிய MWCA&SE/Add.Sec/01 /AD01/119/2022 ஆம் இலக்க சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரின் கொண்ட கடிதத்தின் 04 ஆவது பிரிவிற்கு முரணாக சூரியவெவ பிரதேச செயலகத்தின் மூலம் போக்குவரத்து செலவுகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாது நெல் அரைப்பதற்கான கூலி கணக்கிடப்பட்டிருந்ததன் காரணமாக நெல் அரைத்தல் கூலியாக ரூபா. 1,700,760 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் போக்குவரத்து செலவுகளுக்கான சீராக்கல்கள் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 10 பிரதேச செயலகங்களின் மூலம் ஓய்வூதியம் பெறுவோர் 29 பேருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா. 6,025,880 தெகையில் ரூபா. 3,407,938 ஓய்வூதியத் தொகையானது 2023 திசம்பர் 31ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகத்தின் மூலம் 2024.03.31 ஆம் திகதியன்று ரூபா. 21,995 அறவிடப்பட்டுள்ளதாக | மேலதிகக் கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளரினால் கடிதம் மூலம் 2008ஆம் ஆண்டு கிதலலன்த பிரதேசத்தில் 4.6122 ஹெக்டேயர் பரப்புள்ள காணியின் உரிமையினை கழிவு மீள் சுழற்சி திட்டத்திற்காக திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்திற்கு வழங்கி 15 வருடங்களுக்கு மேல் கடந்திருந்த போதும், 1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிச் சட்டத்தின் 218 ஆம் கட்டளையின் பிரகாரம் கையளித்தல் கட்டளையொன்றின் மூலம் பிரதேச சபைக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றவுடன் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக | 1947இன் 08ஆம் இலக்க அரச காணிச் சட்டத்தின் 218ஆம் கட்டளையின் பிரகாரம் கையளித்தல் கட்டளையொன்றின் மூலம் பிரதேச சபைக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கைத்தொழில் அமைச்சினால் கைத்தொழில் நகரமொன்றினை அமைப்பதற்காக முன்மொழியப்பட்ட சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட சுருவிருகம வெலிஆர என அழைக்கப்படும் சுமார் 20 ஏக்கர் பரப்புள்ள காணியில் இருந்த, வெளி நபர் ஒருவரினால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்த 22 வேப்ப அரங்கள், 04 தேக்கு அரங்கள், 03 மருத அரங்கள் மற்றும் ஒரு கிரில்ல அரத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா. 246,296 அரச உத்தியோகத்தரிகளின் கவனயீனம் காரணமாக அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம், நிதிப் பிரமாணம் 119 இன் பிரகாரம் அறவிடப்படல் வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மாவட்ட செயலகத்தின் மூலம் விசாரனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொலிஸ் முறைப்பாட்டினதும் மாவட்ட செயலகத்தின் விசாரனை நடவடிக்கைகளினதும் பரிந்துரைகளுக்கமைவாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக | ஏற்பட்ட நட்டத்தினை நிதிப் பிரமாணம் 119இன் பிரகாரம் அறவிடல் வேண்டும் |
| (ஊ) | அம்பாந்தோட்டை நிருவாகக் கட்டிடத் தொகுதிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 12 அரச வீடுகளுக்காக மாவட்ட செயலக பிரதான நீர் இணைப்பிலிருந்து வழங்கப்பட்ட நீருக்காக 01 முதல் 09 வரையிலான கால இடைவெளியுடன் தொடர்பான 2023 யூன் 13ஆம் திகதியன்று கூட்டுத்தொகை ரூபா. 1,905,190 நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சரியான ஒழுங்கில் நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | 1979 இன் 07ஆம் இலக்க அரசின் காணி உரிமையினை மீளப் பெறும் சட்டத்தின் 07ஆம் பிரிவின் பிரகாரம் திஸ்ஸமஹாராம, சூரியவெவ, அம்பாந்தோட்டை மற்றும் லுனுகம்வெஹெர ஆகிய பிரதேச செயலகங்களுடன் தொடர்பான அரச காணிகளை சட்டத்திற்கு முறனாக கைப்பற்றுதல் தொடர்பில் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் 08 பேருக்கு நீக்கல் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கும் செயற்பாடு 01 முதல் 03 வருடத்திற்கு இடைப்பட்ட காலம் முதல் தாமதமாகி வருவது அவதானிக்கப்பட்டது. | திஸ்ஸமஹாராம மற்றும் சூரியவெவ பிரதேச செயலகங்கள் இது தொடர்பாக கவனம் செலுத்தி, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக, லுனுகம்வெஹெர மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச செயலகங்கள் வழக்குத் தீர்ப்பின் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நீக்கல் கட்டளையை செயற்படுத்துவதாக | நீக்கல் கட்டளை மற்றும் வழக்குத் தீர்ப்பின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டம். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்கள் சேவைளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஜனவரி 24 திகதிய 05/2008(1) இலக்க மற்றும் 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் மூலம் அரச நிறுவனங்களின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை கூடுதல் செயற்திறன் மிக்கதாகவும் விளைதிறன் கொண்டதாகவும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சகல அரச நிறுவனங்கள் மூலமும் தமது நிறுவனத்திற்கான பிரசைகள்.ˑ.சேவை பெறுநர் சாசனத்தை அறிமுகப் படுத்தல் வேண்டும். மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, ஓகேவெல, சூரியவெவ மற்றும் பெலிஅத்தை பிரதேச செயலகங்களில் பிரசைகள் சாசனம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | பிரசைகள் சாசனத்தினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பிரசைகள் சாசனத்தினை நாளதுவரையாக்கம் செய்து காட்சிப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் பிரசைகள் / சேவை பெறுநர் சாசனத்திற்கு அமைவாக பலா மரம் வெட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான அனுமதியை வழங்குவதற்கு ஒரு நாள் செலவாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், 2021 ஆம் ஆண்டு வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பதாரி ஒருவர் பலா மரம் வெட்டுவதற்காக சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்திற்காக 2024 பெப்ரவரி 20ஆம் திகதி வரையில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டு தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த விண்ணப்பப் படிவத்திற்காக 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையில் அனுமதிப்பத்திரம் வழங்குவது தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏதோவொரு தவறு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதோடு, எதிர்காலத்தில் சேவை பெறுநர் சாசனத்தின் அடிப்படையில் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக | பிரசைகள்.ˑ.சேவை பெறுநர் சாசனத்திற்கு அமைவாக செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் செயற் படுத்தப்பட்டிருந்த அம்பாந்தோட்டை வர்த்தக வலயத்திற்கான காணியை பெற்றுக் கொள்வதற்காக குடியிருப்பாளர்கள் 112 பேருக்கு வீடுகளும், 07 பேருக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணிகளும் வழங்கப்பட்டு சுமார் 17 வருடங்கள் கடந்திருந்த போதும், அச் சொத்துக்களுக்கு உரிமை கோருவதற்கான முறையான ஆவணங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 67 வீடுகள் கைமாற்றம் செய்யப்பட்டு அல்லது கைவிடப்பட்டுள்ளதுடன், ஏனைய 52 காணி உரிமையாளர்களுக்கும் நீண்டகால குத்தகை தயாரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்ட போதும், அவர்கள் இலவச கொடைப்பத்திரம் பெற்றுத்தருமாறு வேண்டுவதன் காரணமாக அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியப்பாடு தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வினவப்பட்டுள்ளதாக | சொத்துக்களுக்கான உரிமைப் பத்திரம் வழங்கப்படல் வேண்டும். |
| (ஈ) | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தில் 2019, 2020, 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில் காணி பதிவுக் காரியாலயங்கள் மூலம் இனங்காணப்பட்ட 35 விண்ணப்பதாரர்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கொள்வனவு விலையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த 08 அனுமதிப்பத்திரங்கள் 2023 நவம்பர் 06 ஆம் திகதி வரை அனுமதிப்பத்திர உரிமையாளர் களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அரசிற்கு சேர வேண்டிய வருமானம் கிடைக்காது போயுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதும், அவர்கள் கலந்து கொள்ளவில்லை. எதிர்காலத்தில் அதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக | வெளியிட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை அனுமதிப்பத்திர உரிமையாளர் களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று அனுமதிக்கப்பட்ட பணிக்குழு அங்கத்தவர்கள் மற்றும் உண்மையான பணிக்குழு அங்கத்தவர்களின் தகவல்களின் அடிப்படையில் 64 உயர் தர பதவிகளுக்கான மிகை காணப் பட்டமை அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற மேலதிக பணிக்குழுவினரை முறைப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக 2021.11.20 திகதிய DSH/ADM/11/2/14 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட்ட பதவியணியினரை எண்ணிக்கையை 96 இனால் அதிகரித்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளதாக | மேலதிகங்களை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேலாக ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்து சேவையாற்றியுள்ள எல்லா உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையங்களில் சேவை யாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டியிருந்த போதும், மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களில் 579 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 வருடாந்த இடமாற்றம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், 05 வருடங்களுக்கு கூடிய சேவைக் காலத்தைக் கொண்ட 40 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் சேவை நிலையங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாக. | 2001 ஆகஸ்ட் 22ஆம் திகதிய 18/2001 இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |